# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடம்

# பணிப்பாளர் பதவி

# (POST OF DIRECTOR)

**பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

| | | |
|---|---|---|
| தகைமைகள் | : | சிரேஷ்ட நிர்வாகத் தர மருத்துவ அதிகாரி மருத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தினால் (PGIM) வழங்கப்படும் MD மருத்துவ நிர்வாகத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும், SJGH பணிப்பாளர் சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு உட்பட்டது. |
| அனுபவம் | : | மருத்துவ நிர்வாகத்தில் 07 வருடங்கள் |
| வயது | : | விண்ணப்பதாரர்கள் 2026 ஜூன் 01ஆம் திகதியில் 60 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். |
| சம்பளம் | : | SL 03 |

ரூபா 210,000 – 12x6530 – 288,360.00 மாதாந்தம். (2027-01-01) 07/2025 DMS சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதியில் மேற்கூறிய சம்பள அளவுக் கொடுப்பனவு முழுமையாக்கப்படும். வருடாந்த சம்பள உயர்வைப் பெறுவதைப் பொறுத்து சம்பள நிலை நிர்ணயிக்கப்படும்.

சம்பளத்திற்கு மேலதிகமாக சபையினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இதற்கு மேலதிகமாக தளபாடங்களுடனான பங்களா மற்றும் வாகனம் வழங்கப்படும்.

வேலைவாய்ப்பின் நியதிகள் : நிரந்தரம் மற்றும் சேமலாப நிதி அடிப்படையில்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் குறுகிய கால அறிவிப்பில் கடமைகளை ஏற்றுக்கொள்ளவும் மற்றும் வைத்தியசாலை வளவில் வழங்கப்படும் உத்தியோகபூர்வ விடுதியில் தங்கவும் தயாராக இருக்க வேண்டும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் நிறுவனம் / திணைக்களத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என இயைபுடைய நிறுவனம் / திணைக்களத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2026 ஜூன் 25ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
**2026 ஜூன் 09.**